
கல்வாரி வரைந்த காவியங்கள்
INRI
அ.அல்போன்ஸ்
திருச்சி
அன்பின் மடல்

# கல்வாரி வரைந்த காவியங்கள்

அ. அல்போன்ஸ். திருச்சி

சிலுவையைச் சுற்றி நின்ற ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் தனித்தனி மனிதர்களாக அல்ல, இறைவனின் மீட்புக் காவியத்தின் உயிருள்ள அத்தியாயங்களாகக் காண அழைக்கிறது. உலக இலக்கியத்தில் பல காவியங்கள் வீரர்களின் வெற்றியையும், அரசர்களின் புகழையும், மனித சாதனைகளையும் பாடுகின்றன; ஆனால் கல்வாரி வரைந்த காவியம் முற்றிலும் மாறுபட்டது. இங்கு வெற்றி வாளால் அல்ல, சிலுவையால் கிடைக்கிறது; மகிமை அதிகாரத்தால் அல்ல, தியாகத்தால் வெளிப்படுகிறது; அரசாட்சி அரியணையில் அல்ல, கல்வாரியின் மரச்சிலுவையில் நிறுவப்படுகிறது. இந்தக் காவியத்தின் மையத்தில் சிலுவையில் தொங்கும் கிறிஸ்து இருக்கிறார்; அவரைச் சுற்றி நின்ற ஒவ்வொருவரும் ஒரு தனி பாடலாகவும், ஒரு தனி அதிகாரமாகவும் மாறுகின்றனர்.

இறைவன் கல்வாரி மலையை மனிதகுலத்தின் மிகப் பெரிய ஓவியப் பலகையாக மாற்றி, அன்பு, தியாகம், வேதனை, மன்னிப்பு, மனந்திரும்புதல், விசுவாசம், மறுப்பு, நம்பிக்கை, இரக்கம், அருள் ஆகிய எண்ணற்ற ஆன்மீக வண்ணங்களால் உலகின் மீட்புக் காவியத்தை வரைந்தார்.

**1. அன்னை மரியா – சிலுவையின் அடிவாரத்தில் நின்ற புதிய ஏவாள்**



கல்வாரி மலையில் சிலுவையின் அடியில் நின்றவர்களில் முதன்மையானவர் அன்னை மரியா. உலக வரலாற்றில் ஒரு தாய் தன் மகனின் மரணத்தைப் பார்ப்பது மிகப்பெரிய வேதனையாகக் கருதப்படுகிறது. ஆனால் மரியாவின் துயரம் ஒரு தனிப்பட்ட தாயின் துயரம் மட்டுமல்ல; அது மனிதகுலத்தின் மீட்பில் இறைவனின் திட்டத்துடன் முழுமையாக ஒன்றிணைந்த விசுவாசத்தின் துயரமாகும். பெத்லகேமில் குழந்தையைத் தழுவிய அதே கரங்கள், கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்ட மகனை நோக்கி மௌனமாகத் தாங்கின. சிமியோன் கூறிய, *''உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்''* (லூக் 2:35) என்ற தீர்க்கதரிசனம் கல்வாரியில் நிறைவேறியது.

மரியா இங்கு

- புதிய ஏவாள்
- திருச்சபையின் தாய்
- புதிய உடன்படிக்கையின் பேழை
- விசுவாசத்தின் நிறைவு

கத்தோலிக்க இறையியலில் மரியா **புதிய ஏவாள்** என்று அழைக்கப்படுகிறார். முதல் ஏவாள் ஒரு மரத்தின் அருகில் கீழ்ப்படியாமையால் மனிதகுலத்திற்கு மரணத்தைத் தந்தாள்; புதிய ஏவாளான மரியா சிலுவை என்னும் புதிய மரத்தின் அருகில் முழு கீழ்ப்படிதலால் மீட்பின் பணியில் இணைந்து நின்றார். யோவான் 19:26–27-இல் இயேசு, *''இவரே உம் தாய்''* என்று கூறியபோது, மரியா யோவானுக்கு மட்டுமல்ல, திருச்சபை முழுவதற்கும் தாயாக வழங்கப்பட்டார். எனவே, கல்வாரியின் அடிவாரத்தில் நின்ற மரியா, துயரத்தின் உருவமாக அல்ல, நம்பிக்கையின் உருவமாக நிற்கிறார்.

### 2. அன்புச் சீடர் யோவான் – சிலுவையின் நிழலில் பிறந்த திருச்சபையின் மகன்

பன்னிரண்டு சீடர்களில் பெரும்பாலோர் பயந்து ஓடிவிட்ட நேரத்தில், ஒரே ஒரு சீடர் மட்டும் சிலுவையின் அடிவாரத்தில் உறுதியாக நின்றார். அவர் அன்புச் சீடர் யோவான். யோவானின் இந்த நிலை ஒரு தனிப்பட்ட தைரியம் மட்டுமல்ல; உண்மையான சீடத்துவத்தின் உச்ச வடிவமாகும். அவர் அற்புதங்களைப் பார்த்தபோதும் இயேசுவுடன் இருந்தார்; அதைவிட முக்கியமாக, தோல்விபோலத் தோன்றிய சிலுவையிலும் அவரை விட்டுப் பிரியவில்லை. வெற்றியின் நேரத்தில் ஆண்டவரைப் பின்பற்றுவது எளிது; ஆனால் தோல்விபோலத் தோன்றும் தருணத்திலும் அவருடன் நிற்பதே உண்மையான விசுவாசம் என்பதை யோவான் கற்றுக்கொடுக்கிறார்.



சிலுவையில் இயேசு மரியாவை நோக்கி, *''அம்மா, இவரே உம் மகன்''* என்றும், யோவானை நோக்கி, ***இவரே உம் தாய்*** என்றும் கூறியபோது, ஒரு புதிய குடும்பம் உருவானது. இது இரத்த உறவின் குடும்பமல்ல; திருச்சபை என்பது இந்தப் புதிய குடும்பத்தின் பெயர். யோவான் ஒவ்வொரு விசுவாசியையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். மரியாவை வீட்டிற்கு அழைத்துச் சென்றது, விசுவாசி மரியாவை தன் ஆன்மீக வாழ்வில் ஏற்றுக்கொள்வதற்கான அடையாளமாகக் கத்தோலிக்க இறையியல் விளக்குகிறது.

அவர்

- விசுவாசமுள்ள சீடன்
- புதிய திருச்சபையின் பிரதிநிதி
- எல்லா கிறிஸ்தவர்களின் உருவகம்

**சிலுவையை விட்டு ஓடாதவர்களே உயிர்த்தெழுதலின் மகிமையை முழுமையாகக் காண்பார்கள்.**

**3. மரியா மக்தலேனா – மன்னிப்பின் கண்ணீரிலிருந்து உயிர்த்தெழுதலின் முதல் சாட்சிவரை**



மரியா மக்தலேனாவின் வாழ்க்கை முழுவதும் இறையருளின் வெற்றிக் கதை. ஒருகாலத்தில் தீய ஆவிகளின் பிடியில் இருந்தவர், இயேசுவின் இரக்கத்தால் முழுமையாக மாற்றப்பட்டார். அதனால் கல்வாரியில் பலர் பயத்தால் விலகியபோதும், அவர் சிலுவையின் அருகில் நின்றார். அன்பு, பயத்தைவிட வலிமையானது என்பதை அவரது வாழ்க்கை அறிவிக்கிறது. அவர் சிலுவையில் இரத்தம் சிந்திய ஆண்டவரை பார்த்தார்; பின்னர் காலியான கல்லறையையும் முதலில் கண்டார். சிலுவையின் கண்ணீருக்கும் உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சிக்கும் இடையே பாலமாக நின்றவர் மரியா மக்தலேனா.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் முதலில் தோன்றியது அவருக்கே. இது மனந்திரும்பியவர்களுக்கு இறைவன் அளிக்கும் புதிய பரிசாகும் சிலுவையின் அடிவாரத்தில் நின்ற மக்தலேனா நமக்குச் சொல்லும் செய்தி: **மனம் திருந்தி மன்னிப்பைப் பெற்றால், பின் உயிர்த்தெழுதலின் முதல் சாட்சியாக மாறலாம்.**

**4. நல்ல கள்வன் – ஒரு கணத்தின் மனந்திரும்புதல், நித்தியத்தின் இரட்சிப்பு**


கல்வாரியில் இயேசுவின் இருபுறமும் இரண்டு கள்வர்கள் அறையப்பட்டிருந்தனர். இருவரும் ஒரே தண்டனையை அனுபவித்தனர்; ஒரே மீட்பரைப் பார்த்தனர்; ஒரே வார்த்தைகளைக் கேட்டனர். ஆனால் அவர்களின் பதில் வேறுபட்டது. நல்ல கள்வன் தனது குற்றத்தை மறுக்கவில்லை. ‘‘நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கு ஏற்றத் தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!’’ என்று அவர் ஒப்புக்கொண்டார். இந்த ஒப்புதல் தான் அவரது

மனந்திரும்புதலின் தொடக்கம். பின்னர் அவர், ''இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்'' (லூக் 23:41-43) என்றார். கோடி பெரும் இந்த வார்த்தை மனித வரலாற்றில் மரணத்தின் தருணத்தில் வழங்கப்பட்ட மிகப் பெரிய நம்பிக்கை இதுவாகும்.



கத்தோலிக்க இறையியலில் நல்ல கள்வன் இறைவனின் இரக்கத்தின் உயிருள்ள சின்னம். வாழ்நாள் முழுவதும் பாவத்தில் இருந்தாலும், இறைவனின் அருளை உண்மையோடு ஏற்றுக்கொண்டால் மீட்பு சாத்தியம் என்பதை அவர் காட்டுகிறார். ஆனால் இது மனந்திரும்புதலைத் தள்ளிப்போடுவதற்கான காரணமல்ல; இறைவனின் இரக்கம் எவ்வளவு எல்லையற்றது என்பதற்கான சாட்சி. அவர் எந்த நற்கிரியையையும் செய்ய முடியவில்லை; இருந்தபோதிலும், விசுவாசமும் மனந்திரும்புதலும் அவருக்கு இரட்சிப்பின் கதவைத் திறந்தன. நல்ல கள்வன் ஒவ்வொரு விசுவாசியிடமும் கூறும் செய்தி: **இறைவனின் அருள் தாமதிக்கலாம்; ஆனால் மனந்திரும்பிய இதயத்தை ஒருபோதும் நிராகரிக்காது.**

## . 5. கெட்ட கள்வன் – அருளை நிராகரித்த மனிதனின் சோகம்



கெட்ட கள்வன் மரணத்தின் வாசலில் நின்றிருந்தபோதும், தன் குற்றத்தை உணரவில்லை; மாறாக, இயேசுவை ஏளனமாகப் பார்த்து, **''நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று''** (லூக் 23:38) என்று இகழ்ந்தான். இந்த வார்த்தைகளில் மனந்திரும்புதல் இல்லை; அதிசயத்தை மட்டுமே எதிர்பார்க்கும் சுயநலம் இருந்தது. இறையியல் பார்வையில், அவன் பாவியின் உருவகம் அல்ல; மாறாக, அருளை மறுக்கும் மனிதனின் பிரதிநிதி. இயேசு அவனுக்கு மிக அருகில் இருந்தார்; அவனோ வெகுதொலைவில் இருந்தான்.

சாவின் போதும் சரியாகச் சிந்திக்க தெரியவில்லை. இரட்சிப்பு அவனுடைய கண்முன்னே நின்றது; இருந்தும், அவன் தனது அகந்தையையும் அவநம்பிக்கையையும் விடவில்லை. சிலுவையின் நிழலிலும் மனிதன் தனது இதயத்தை மூடிக்கொள்ள முடியும் என்பதற்கு அவன் ஒரு சோகமான எடுத்துக்காட்டு. கிறிஸ்துவின் அருகாமை மட்டும் இரட்சிப்பை அளிக்காது; அதற்கு மனமாற்றமும் விசுவாசமும் அவசியம் என்பதை அவன் வாழ்க்கை வெளிப்படுத்துகிறது. சிலுவையின்

கீழ் நின்ற உலகம் இரண்டு பதில்களை அளித்தது: ஒருவர் நம்பினார்; மற்றொருவர் நிராகரித்தார். அந்த நிராகரிப்பின் குரலே இந்தக் கெட்ட கள்வனின் குரலாக ஒலிக்கிறது.

**6. படைவீரர்கள் – அறியாமையால் இறைவனின் திட்டத்தை நிறைவேற்றியவர்கள்**



இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்கள் உரோமப் படைவீரர்கள். அவர்களுக்கு இயேசு ஒரு குற்றவாளி மட்டுமே; அவருடைய தெய்வீக அடையாளம் அவர்களுக்கு மறைந்திருந்தது. அவர்கள் இயேசுவின் ஆடைகளைப் பங்கிட்டுக் கொண்டனர்; மேலங்கிக்காகச் சீட்டுப் போட்டனர் (யோவா. 19:23–24). அவர்கள் செய்தது சாதாரண இராணுவ நடைமுறையாக இருந்தாலும், சங்கீதம் 22:18-ல் முன்னறிவிக்கப்பட்ட இறைவார்த்தை அவர்களால் அறியாமலேயே நிறைவேறியது. அவர்கள் இயேசுவை நிந்தித்தனர், கேலி செய்தனர், புளித்த திராட்சை இரசத்தை வழங்கினர். இறையியல் பார்வையில், இவர்கள் தனிநபர்களாக மட்டுமல்ல, அதிகாரத்தின் பெயரில் மனிதநேயத்தை இழக்கும் உலக அமைப்புகளின் பிரதிநிதிகள். கட்டளையை நிறைவேற்றுவது மட்டுமே தங்கள் கடமை என்று எண்ணிய அவர்கள், நீதியையும் இரக்கத்தையும் மறந்துவிட்டனர். இருப்பினும், இறைவன் மனிதனின் அறியாமையைக்கூட தன் மீட்புத் திட்டத்தின் கருவியாக மாற்றுகிறார். அவர்கள் செய்த கொடுமைகள் கூட, கிறிஸ்துவின் பலியின் ஆழத்தை வெளிப்படுத்தின.


**7. ஈட்டியால் குத்திய வீரன் – கிறிஸ்துவின் இதயத்தைத் திறந்த சாட்சி.**

இயேசு இறந்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு உரோம வீரன் அவரது விலாவை ஈட்டியால் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் வடிந்தன (யோவான் 19:34). யோவான் இந்த நிகழ்வை மிகவும் முக்கியமாகப் பதிவு செய்து, ''இதைக் கண்டவரே இதற்குச் சாட்சி. அவரது சான்று உண்மையானதே. (யோவான் 19:35).

இறையியல் பார்வையில், இந்த வீரன் வெறும் படைவீரன் அல்ல; அறியாமலேயே திருச்சபையின் பிறப்பை அறிவித்த சாட்சியாக மாறுகிறான். இயேசுவின் திறக்கப்பட்ட விலாவிலிருந்து வெளியேறிய இரத்தம் மற்றும் தண்ணீர், திருச்சபையின் இரு முக்கிய அருளடையாளங்களான நற்கருணை மற்றும் திருமுழுக்கின் அடையாளங்களாக விளக்கப்படுகின்றன. ஆதாமின் விலாவிலிருந்து ஏவாள் தோன்றியதுபோல், புதிய ஆதாமாகிய கிறிஸ்துவின் திறந்த விலாவிலிருந்து புதிய ஏவாளாகிய திருச்சபை பிறக்கிறது என்று திருச்சபைத் தந்தையர்கள் விளக்குகின்றனர். அந்த வீரன் அழிக்க நினைத்தான்; ஆனால் இறைவன் அந்தச் செயலையே உயிரின் ஊற்றாக மாற்றினார்.


மனிதனின் வன்முறையிலிருந்து கூட மீட்பின் வரலாற்றை உருவாக்கும் இறைவனின் வல்லமையை இந்த நிகழ்வு வெளிப்படுத்துகிறது. திறக்கப்பட்ட இதயம், எல்லா மனிதர்களுக்கும் திறந்த இறையன்பின் கதவாக மாறியது.

### 8. தலைமைக் குருக்கள் – மதத்தின் பெயரில் உண்மையை மறுத்தவர்கள்



இயேசுவின் சிலுவை மரணத்திற்கு வழிவகுத்த முக்கியமானவர்களில் தலைமைக் குருக்களும் அடங்குவர். ஆலய வழிபாடு, பலி, சட்டம் ஆகியவற்றின் காவலர்களாக இருந்த அவர்கள், மெசியா தங்கள் மத்தியில் வந்தபோதும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களின் அதிகாரமும் செல்வாக்கும் குறைந்து விடுமோ என்ற அச்சம், அவர்களை உண்மைக்கு எதிராக நிற்கச் செய்தது. அவர்கள் பொய்ச் சாட்சிகளை ஏற்பாடு செய்தனர்; மக்களைத் தூண்டினர்; பிலாத்துவின் மீது அழுத்தம் கொடுத்து இயேசுவுக்கு மரண தண்டனை பெற்றனர். சிலுவையின் அடியிலும் அவர்கள், “பிறரை விடுவித்தான்; தன்னையே விடுவிக்க இயலவில்லை!” என்று ஏளனம் செய்தனர் (மத். 27:41–43). இறைவனின் பெயரைச் சொல்லிக்கொண்டே இறைவனின் செயலுக்கு எதிராக நிற்க முடியும் என்பதை இவர்களின் வாழ்க்கை உணர்த்துகிறது. இருப்பினும், அவர்களது எதிர்ப்புகூட இறைவனின் மீட்புத் திட்டத்தைத் தடுக்கவில்லை; மாறாக, சிலுவை வழியாக உலக இரட்சிப்பை நிறைவேற்ற உதவியது. இதனால், மத அதிகாரம் எப்போதும் பணிவுடனும் உண்மைக்குக் கீழ்ப்படிதலுடனும் இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கையைத் தலைமைக் குருக்கள் நமக்கு அளிக்கின்றனர்.

### 9. பரிசேயர்கள் மற்றும் மறைநூல் அறிஞர்கள் – சட்டத்தை அறிந்தும் அன்பை இழந்தவர்கள்



பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் யூத சமயத்தின் அறிவார்ந்த தலைவர்களாக இருந்தனர். அவர்கள் திருச்சட்டத்தையும் இறைவார்த்தையையும் ஆழமாக அறிந்திருந்தனர்; ஆனால் அந்த அறிவு அவர்களைக் கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்லவில்லை. மாறாக, சட்டத்தின் வெளிப்புறக் கடைப்பிடிப்பில் பெருமை கொண்டு, அன்பு, இரக்கம், நீதி ஆகியவற்றின் மையத்தை இழந்தனர். இயேசு அவர்களின் போலித்தனத்தை வெளிப்படுத்தியபோது, அவர்கள் அவருக்கு எதிரிகளாக மாறினர். சிலுவையின் கீழ்

நின்றும், "இவன் இஸ்ரயேலுக்கு அரசனாம்! இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும். அப்பொழுது நாங்கள் இவனை நம்புவோம்." (மத். 27:42). என்று சவால் விட்டனர். இறையியல் நோக்கில், இவர்கள் அறிவு இருந்தும் ஞானம் இல்லாத மனிதனின் உருவகமாகத் திகழ்கின்றனர். பரிசேயர்களின் தோல்வி, சமய வாழ்க்கை வெளிப்புறச் சடங்குகளில் முடங்கிவிட்டால் அது இறைவனின் இரக்கத்தை உணர முடியாது என்பதை எடுத்துரைக்கிறது. ஆகவே, அவர்கள் எதிர்மறை கதாபாத்திரங்களாக இருந்தாலும், ஒவ்வொரு விசுவாசியும் தன் உள்ளத்தை ஆய்வு செய்ய அழைக்கும் கண்ணாடியாகவே நிற்கின்றனர்.

## 10. உரோம நூற்றுவர் தலைவர் – சிலுவையின் அடியில் விசுவாசத்தை அறிக்கை செய்த முதல் புறவினத்தார்

கல்வாரி மலையில் சிலுவையைச் சுற்றி நின்றவர்களில் மிகவும் வியப்பூட்டும் கதாபாத்திரம் உரோம நூற்றுவர் தலைவர் ஆவார். உரோமப் பேரரசின் படையில் நூறு வீரர்களுக்குத் தலைவராக இருந்த அவர், இயேசுவின் சிலுவை மரணத்தை நிறைவேற்றும் பொறுப்பில் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரி. அவரது வாழ்க்கை ஒழுக்கம், கட்டளை, போர், தண்டனை, மரணம் ஆகியவற்றோடு பின்னிப் பிணைந்திருந்தது. பல சிலுவை மரணங்களை அவர் பார்த்திருக்கலாம்; பல குற்றவாளிகளின் இறுதி அலறல்களையும் கேட்டிருக்கலாம். ஆனால் கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்ட இயேசு, அவர் இதுவரை கண்ட எந்த மனிதரையும் ஒத்தவரல்ல என்பதை அவர் உணர்ந்தார். மரண தண்டனையை நிறைவேற்ற வந்தவர், மரணத்தின் வழியாக வெளிப்பட்ட இறைவனின் மகிமையைச் சந்தித்தார்.

இயேசு சிலுவையில் தொங்கியபோது அவர் கண்ட காட்சிகள் சாதாரண நிகழ்வுகள் அல்ல. அவரை அறைந்தவர்களுக்காகவே ''தந்தையே, இவர்களை மன்னியும்'' (லூக் 23:34) என்று மன்னிப்பின் ஜெபம் செய்த இயேசுவைக் கேட்டார். தன்னை அவமதித்தவர்களுக்குப் பதிலாகசாபமோ சினமோ இல்லாமல் கருணையையே வழங்கிய அந்த மௌன அரசனை அவர் கண்டார். நல்ல கள்வனுக்குப் விண்ணரசை வாக்களித்த கருணையையும், தன் தாயை சீடனிடம் ஒப்படைத்த அன்பையும், ''என் இறைவா, என் இறைவா'' (மத் 27:48) என்ற வேதனையின் அழைப்பையும், ''எல்லாம் நிறைவேறிற்று'' (யோவான் 19:30)என்ற வெற்றியின் அறிவிப்பையும், ''தந்தையே, உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்'' (லூக் 23:48) என்ற முழுமையான ஒப்புக்கொடுத்தலையும் அவர் கேட்டார். இந்த வார்த்தைகள் ஒரு தோல்வியடைந்த குற்றவாளியின் வார்த்தைகள் அல்ல; தன் உயிரைத் தானே அர்ப்பணிக்கும் தெய்வீக மீட்பரின் வார்த்தைகள் என்பதை அவரது உள்ளம் உணரத் தொடங்கியது.



நூற்றுவர் தலைவன் ஒரு முக்கியமான ஆன்மீக மாற்றத்தின் உருவகமாகவும் விளங்குகிறார். அவர் இயேசுவைக் காவல் காக்க வந்தார்; ஆனால் இயேசுவின் மகிமைக்கு சாட்சியாக மாறினார். அதிகாரம் அவருக்கு வலிமையைத் தந்தது; ஆனால் சிலுவை அவருக்கு உண்மையைத் தந்தது. இது ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு அழைப்பு. பதவி, கல்வி, செல்வம், அதிகாரம் ஆகியவை இறைவனை அறியச் செய்யாது; திறந்த இதயம் மட்டுமே கிறிஸ்துவின் முகத்தை உணரச் செய்யும்.

**சிலுவையின் முன் நின்ற மனிதர்கள் – நம் வாழ்வின் கண்ணாடி**

கல்வாரி மலையில் நிகழ்ந்த சிலுவை நிகழ்வு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு வரலாற்றுச் சம்பவமாக இருந்தாலும், அதன் அழைப்பு ஒவ்வொரு தலைமுறைக்கும் புதிதாக ஒலித்துக்கொண்டே இருக்கிறது. சிலுவையைச் சுற்றி நின்றவர்கள் மனித வரலாற்றின் மறைந்த முகங்கள் அல்ல; ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் வாழும் மனப்பாங்குகளின் பிரதிநிதிகளாக உள்ளனர்.



அன்னை மரியா – உடைந்த இதயத்தோடும் உடையாத விசுவாசத்தோடும், சிலுவையின் கீழ் மனிதகுலத்தைத் தாய்மையால் அரவணைத்த புதிய ஏவாள்.

அன்புச் சீடர் யோவான் – அனைவரும் விலகியபோது, அன்பை மட்டும் பற்றிக்கொண்டு சிலுவையின் நிழலில் திருச்சபையின் முதல் மகனாக நின்ற சீடன்.

மரியா மக்தலேனா – மன்னிப்பின் கண்ணீரை நன்றியின் நறுமணமாக மாற்றி, சிலுவையிலிருந்து உயிர்த்தெழுதலுக்குச் சென்ற அன்பின் சாட்சி.

நல்ல கள்வன் – வாழ்நாள் முழுவதும் மூடியிருந்த சொர்க்க வாசலை, ஒரு கணத்தின் மனந்திரும்புதலால் திறந்த நம்பிக்கையின் திருடன்.

கெட்ட கள்வன் – மீட்பர் அருகிலேயே இருந்தும், அகந்தையால் அருளின் கதவைத் தானே மூடிக்கொண்ட மறுப்பின் உருவகம்.

படைவீரர்கள் – ஆணிகளால் கைகளை அறைந்தும், தாங்களே அறியாமல் உலகின் மீட்பின் கதவைத் திறந்த அறியாமையின் கருவிகள்

ஈட்டியால் குத்திய வீரன் – ஒரு காயத்தை உருவாக்க நினைத்த ஈட்டியால், அறியாமலே திருச்சபை பிறந்த விலாவைத் திறந்த இறையருளின் மௌனக் கருவி.

தலைமைக் குருக்கள் – ஆலயத்தின் திரையைக் காத்தும், ஆலயத்தின் ஆண்டவரை இழந்த மத அகந்தையின் உயிருள்ள எச்சரிக்கை

பரிசேயர்கள் மற்றும் மறைநூல் அறிஞர்கள் – கொசுவை வடிக்கட்டி ஒட்டகத்தை விழுங்கியர்கள். வேதத்தின் எழுத்துக்களை மனப்பாடம் செய்தும், வேதத்தின் நிறைவாக நின்ற உயிருள்ள வார்த்தையை நிராகரித்த ஆன்மீகக் குருட்டுத்தனத்தின் உருவகங்கள்.

உரோம நூற்றுவர் தலைவர் – இரத்தத்தில் நனைந்த சிலுவையை நோக்கி, வாளின் வீரனிலிருந்து விசுவாசத்தின் சாட்சியாகப் பிறந்த புறஜாதியின் முதல் அறிக்கையாளர்.

.அதிகாரம், அறிவு, பயம், இரக்கம், விசுவாசம், மனமாற்றம், எதிர்ப்பு, அன்பு, தியாகம் ஆகிய அனைத்தும் சிலுவையின் அடியில் ஒன்றாகச் சந்திக்கின்றன. அதனால்தான் சிலுவை மனித குலத்தின் மிகப் பெரிய நீதிமன்றமாகவும், மிகப் பெரிய இரக்கத்தின் அரியணையாகவும் விளங்குகிறது. இறுதியில், கல்வாரியின் சிலுவை கடந்த காலத்தின் நினைவுச்சின்னம் அல்ல; அது இன்றும் மனித இதயங்களை மாற்றும், மனந்திரும்பச் செய்யும், நம்பிக்கையைப் புதுப்பிக்கும், உயிர்த்தெழுதலுக்குத் தயார்படுத்தும் இறைவனின் நித்திய அன்பின் அழைப்பாகவே நிலைத்திருக்கும்.